செய்தி வெளியீடு எண்:039 நாள் : 18.01.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு B.V. ரமணா அவர்கள் தமிழகத்தில் செயல்படுத்துப்பட்டு வரும் பால்வளத் திட்டங்கள் குறித்து இன்று (18/01/16) தலைமைச்செயலகத்தில் ஆவின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட ஆய்வுக்கூட்டத்தை நடத்தினார்கள். இந்த ஆய்வுக்கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை செயலாளர் முனைவர் ச.விஜயகுமார், இ.ஆ.ப., பால்வளத்துறை ஆணையர் மற்றும் ஆவின் நிர்வாக இயக்குநர் திரு சுனீல் பாலீவால், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் நலனைக் கருத்தில் கொண்டு 2011–2016 ஆம் ஆண்டுகளில் ஆவின் வளர்ச்சிக்காக பல்வேறு பால்வளத் திட்டங்களுக்கு 593 கோடியே 65 லட்சம் ரூபாய் அளவிற்கு நிதி உதவி வழங்கியுள்ளார்கள். இதன் காரணமாக ஆவின் பால் உற்பத்தி கடந்த நான்கரை ஆண்டுகளில் நாளொன்றுக்கு சராசரியாக சுமார் 9.00 இலட்சம் லிட்டர் உயர்ந்து தற்போது 30 இலட்சம் லிட்டர் என்ற சரித்திர சாதனையை எட்டியுள்ளது. இதேபோல் பால் விற்பனையும் இந்தக் காலக்கட்டத்தில் நாளொன்றுக்கு சுமார் 2.00 இலட்சம் லிட்டர் உயர்ந்து தற்போது சென்னை மாநகர விற்பனை நாளொன்றுக்கு 11.50 லட்சம் லிட்டர் என்ற இலக்கினை எட்டியுள்ளது. பால் விற்பனையை மேலும் நாளொன்றுக்கு 2.00 இலட்சம் லிட்டர் அளவிற்கு உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அம்பத்துார் பால் பண்ணை வளாகத்தில் 23 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வரும் ஐஸ்கிரீம் தொழிற்சாலை வரும் பிப்ரவரி மாதம் திறக்கப்டும் வகையில் தற்போது சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. இந்த ஐஸ்கிரீம் தொழிற்சாலை

நாளொன்றுக்கு 15000 லிட்டர் ஐஸ்கிரீம் மற்றும் 1000 கிலோ பனீர் தயாரிக்கும் திறன் கொண்டது. ஆவின் வணிகச்சின்னத்தை விளம்பரப்படுத்தும் வகையில் 700 ஆவின் விற்பனை நிலையங்களுக்கு பெயர் பலகை வழங்கப்பட்டுள்ளது. 32 பள்ளி கல்லூரிகளில் ஆவின் பால் பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது, மேலும் 68 பள்ளி கல்லூரிகளில் ஆவின் விற்பனை மையங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. சென்னையில் 16 இடங்களில் ஆவின் அதி நவீன பாலகங்கள் அமைக்கபடும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிற்பிற்கிணங்க, இடங்கள் தேர்வு செய்யப்பட்டு பாலகம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதில் முதற்கட்டமாக விருகம்பாக்கத்தில் ரூபாய் 1 கோடியே 67 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள ஆவின் அதி நவீன பாலககத்தை கடந்த 13.11.15 அன்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திறந்து வைத்தார்கள். மேலும், அசோக் பில்லர், வண்ணாந்துரை, பெசன்ட் நகர் மற்றும் பாலவாக்கத்தில் ஆவின் அதிநவீன பாலகம் பிப்ரவரி 2016 மாதம் தொடங்கப்படும். மேலும் மற்ற பாலகங்கள் வரும் மாதங்களில் அடுத்த கட்டமாக திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆவின் சோழிங்கநல்லூர் பால் பண்ணையில் நவீன முறையில் பாலை பதப்படுத்தி 60 முதல் 90 நாட்கள் வரை கெடாமல் வைத்திருக்கும் வகையில் பிளக்சி பேக்கில் அடைத்து விற்பனை செய்ய வகை செய்யும் பால் பண்ணை அமைக்க ரூபாய் 26 கோடி செலவில் திட்டங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவின்படி செயல்படுத்தப்படவுள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஆவின் இணை நிர்வாக இயக்குநர் திரு எஸ். ஜெயக்குமார் துணை பால் ஆணையர் திரு எஸ். துரைசாமி, பொது மேலாளர் (விற்பனை) திரு எஸ்.கே.கதிர்வேலு, பொதுமேலாளர் (நிதி) திரு சி. ரவி, பொது மேலாளர் (பொறி) திரு சி.லோகிதாஸ் மற்றும் பால்வளத்துறை, ஆவின்அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**